
ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 3 | செப்டம்பர் 1997 | கானம் : 2

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 3 செப்டம்பர் 1997 கானம் : 2


## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியைப் பற்றிய கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 22 | 4 |
| 3. | முதலாழ்வார்கள் வைபவம் | 6 |
| 4. | நக்ஷத்திரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 3 | 12 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள் - தொடர்ச்சி | 14 |
| 6. | பாவ லோகத்தில் ஒரு ஸஞ்சாரம் - 3 | 17 |
| 7. | வேத கதைகள் - 4 | 21 |
| 8. | நாம ஸங்கீர்த்தன யாத்திரை | 23 |
| 9. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 25 | 29 |
| 10. | செய்திகள் | 32 |



மதுரபுரி ஆஸ்ரமத்தில், ப்ரஹ்மோத்ஸவத்தின் பொழுது
பெருமாள் புறப்பாடு சென்று ஆஸ்ரமத்திற்கு திரும்பி வரும் காட்சி

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியைப் பற்றிய கீர்த்தனம்

ஒன்றே தெய்வம் நீயே பகவான்
அபயம் தருவாய் குருநாதா

இரண்டு செவிகளில் ஸதா உன் நாமம்
ஒலிக்கச் செய்வாய் குருநாதா

மூன்று உலகமும் அளந்த உன் சரணம்
மலர்ந்த கமலம் குருநாதா

நான்மறை வழியே வந்தாயே
வேதமும் நீயே குருநாதா

ஐம்புல கள்வரை அடக்கி என்னை
ஆட்கொள்வாயே குருநாதா

ஆறு பகைவரை விரட்டி என்னுள்
ஆட்சி புரிவாய் குருநாதா

ஏழுமலையில் வாஸம் செய்யும்
திருவேங்கடமும் நீயே குருநாதா

எட்டாத பக்திக் கனியை எனக்கு
பறித்துத் தருவாய் குருநாதா

நவவித பக்தியை வேண்டி உன்தாள்
பணிந்து நின்றேன் குருநாதா

தஸாவதாரமும் எமக்கு என்று
காட்டுவாயோ குருநாதா!

- **M.K.** ராமானுஜம்

Photographs by : Sri S. Sridhar

## 22

ஸமீபத்தில், நம் ஸ்வாமிகள், பெங்களூர் ஸ்ரீ க்ருஷ்ணர் கோவிலில் *பக்த விஜயம்* உபன்யாசம் நிகழ்த்தினார்கள். அதற்குப் பிறகு, மீண்டும் ஶாரதா ஸத்ஸங்கத்தின் சார்பில், பஸவங்குடி ச்ருங்கேரி மடத்தில் உபன்யாசம் நிகழ்த்தினார்கள். பூர்த்தி நாளன்று ச்ருங்கேரி மஹா ஸந்நிதானம், ஶால்வை, ப்ரசாதம் எல்லாம் அனுப்பியிருந்தார்கள். இதே ஊரில், பாலா மாமி என்ற மாதுஸ்ரீ ஒரு ஸத்ஸங்கத்தை ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்கள். ப்ரதி வருடமும் ஆடிப்பூர உத்ஸவத்தை வெகு விமர்சையாக ஏழு நாட்களுக்கு நடத்தி வருகின்றார்கள். இந்த வருடம் ஆடிப்பூர உத்ஸவத்தில், ஸ்ரீ ஸ்வாமிகளின் உபன்யாசத்தை கேட்க ஆசைப்பட்டார்கள். ஆனால், ஸ்வாமிகளால் இந்த வருடம் உபன்யாஸத்திற்கு ஒத்துக் கொள்ள முடியவில்லை.

ஸமீபத்தில், ஸ்ரீ மஹா பெரியவாளின் ஜயந்தி மஹோத்ஸவத்தை கும்பகோணத்தில் கொண்டாடினோம் அல்லவா? வரும் வருடம், 1998 ஜூன் 9-ந்தேதி, ஸ்ரீ மஹா பெரியவாளின் ஜயந்தி மஹோத்ஸவத்தை பெங்களூரில் கொண்டாடலாம் என்ற உத்தேசம் இருக்கிறது. அந்த ஸமயத்தில், நூற்றியெட்டு பாகவதர்களைக் கொண்டு ஒரே ஸமயத்தில் ''*பாகவத ஸப்தாஹ மஹா யக்ஞம்*'' நடத்த ஏற்பாடாகி வருகின்றது. பெங்களூரைச் சேர்ந்த ஸ்ரீமான் மூர்த்தி அவர்கள் இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகின்றார். இது மட்டுமல்லாமல், சென்ற வருடம் ஸ்ரீ மஹா பெரியவாளின் ஆராதனை ஸமயத்தில், சென்னை ஸம்ஸ்க்ருத கல்லூரியில் நம் மிஷன் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட '*ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண ஸதஸ்*'' போன்று ஒரு ஸதஸ் வரும் ஜனவரி 23, 24, 25, 26 தேதிகளில் பெங்களூரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பொறுப்பை ஸ்ரீமான்கள் பாலக்ருஷ்ணன் மற்றும் மூர்த்தி அவர்கள் ஏற்று ஏற்பாடுகளை செய்து வருகின்றார்கள்.

இந்த இரண்டு வைபவங்களின் விஷயமாக பேசுவதற்கு, நம் ஸ்வாமிகள் பெங்களூர் சென்று இருந்தார்கள். அன்று மறுநாள் ஆடிப்பூரம். ஆடிப்பூரத்தன்று மாதுஸ்ரீ பாலா மாமி நடத்தி வரும் ஸத்ஸங்கத்திற்கு ஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். அங்கு, ''ஸாதுக்களின் ஸங்கத்தின் அவஶ்யம்'' என்பது பற்றி சிறிது நேரம்

உபன்யாசம் நிகழ்த்தினார்கள். அங்கு ராதாக்ருஷ்ண யுகளத்தின் அலங்காரம் உட்பட பல விஷயங்கள் மாதுஸ்ரீயின் ரஸரூபமான பக்தியையே வெளிப்படுத்தின. அந்த ஸத்ஸங்கத்தின் அன்பர்கள் அனைவரும் பக்தி சிரத்தையுடன் உபன்யாசத்தைக் கேட்டார்கள். ஸ்வாமிகளும், இது மாதிரியான ஸுத்தமான ஸாத்வீக ஸத்ஸங்கம் ஸ்ரீ க்ருஷ்ண க்ருபை இருந்தால் தான் கிடைக்கும் என்றும், இந்த ஸத்ஸங்கத்தில் ஈடுபட்டவர்கள் அனைவரும் பாக்யசாலிகள் என்றும் கூறினார்கள்.

(தொடரும்)

-ஜயந்தி ஜானகிராமன்

## கோபிகைகள்

ஸ்ரீ ஸ்வாமிகளை ஆஸ்ரயித்து வருபவருள் ஒருவர், ஸமீபத்தில் ஸ்ரீமத் பாகவதத்தில் வரும் ''கோபிகா கீதம்'' பற்றிய சிறிய புத்தகங்களை ஸ்ரீ ஸ்வாமிகளிடம் ஸமர்ப்பித்தார். அதைப் பார்த்தவுடன்,

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஓ! கோபிகா கீதமா, The song of Gopikas. இதையும் தனியாக பிரசுரம் செய்கிறார்களா?

வந்தவர் : ஆமாம்.

ஸ்ரீ ஸ்வாமிகள் : (புன்முறுவலுடன்) சரி, நீ இதை நம் ஸங்கத்தில் வரும் கோபிகைகளுக்கு கொடுத்துவிடு.

வந்தவர் : அப்பாடி! வம்பாய்ப் போய்விடுமே. நீங்களே சொல்லுங்கள் யார் கோபிகைகள் என்று.

ஸ்ரீ ஸ்வாமிகள் : நீயே கண்டுபிடி, யார் எப்பொழுதும் ப்ரஸன்னமாகவும் ஸந்தோஷமாகவும் உள்ளனரோ அவர்களே கோபிகைகள். (பிறகு பலத்த புன்முறுவலுடன்) க்ருஷ்ணருக்கு அழுது வடிபவர்களைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது. Gopikas are always cheerful and happy.

வந்தவர் : Always cheerful, happy & contendedஆ, குருஜி?

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஆமாம், always happy, contended and cheerful.

- ராமு

# முதலாழ்வார்கள் வைபவம்

ஸ்ரீய: பதியான எம்பெருமான், நீக்கமற எங்கும் நிறைந்து விளங்குகின்றான். நம்மாழ்வார், ''*கறந்த பாலுள் நெய் போல் இவற்றுளெங்கும் கண்டு கொள்*' என்று பாடுகிறார். கறந்த பாலில் எப்படி நெய்யானது கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் அது இருப்பது என்பது உண்மையோ; அது போல், பகவானும் நம் கண்ணுக்கு புலப்படா விட்டாலும் எங்கும் வியாபித்துள்ளான் என்பது இதன் பொருளாகும். இவ்வாறு, எங்கும் நீக்கமற இருக்கும் பெருமானுடைய ஐந்து நிலைகளை ஞானிகள் (முன்னோர்கள்) மிகவும் விசேஷமாகச் சொல்வர். அவை பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்பனவாகும்.

*பரம்* எனப்படுவது, ''தத் விஷ்ணோ: பரமம் பதம்'' என்று வேதத்தில் போற்றப்படுவதான ஸ்ரீ வைகுண்டம் ஆகும். இதற்கு, ''நித்ய விபூதி'' என்றும் பெயருண்டு. ''ஸதா பஶ்யந்தி சூரய:'' என்று இமை கொட்டாமல் பகவானை, நித்யசூரிகள் பார்த்துக்கொண்டே இருப்பார்கள். இரண்டாவதாக, '*வ்யூஹம்*' என்பது ''க்ஷீராப்திநாதன்'' பாற்கடலில் பள்ளி கொள்ளும் நிலையாகும். பகவானின் இந்நிலையில் தேவர்கள் தங்கள் குறைகளைக் கூற, பகவான் அவற்றை களைகிறான்.

மூன்றாவதானது ''*விபவம்*'' எனப்படுவதாகும். விபவம் என்பதற்கு பகவானின் அவதாரம் என்று பொருள். ''பவம்'' என்பதற்கு பிறவி என்று அர்த்தம். பகவானுடைய அவதாரம் சாமான்ய மனிதர்களைப் போல் கர்ம வசமின்றி, சுவேச்சையாக இருப்பதால் ''விபவம்'' என்று விசேஷமாக அழைக்கப்படுகிறது. பகவான், விபவாவதாரத்தின் மூலம் தன் சரித்திரத்தைக் கொடுத்து அதன் மூலம் ஜீவன்களை அவர்களுடைய ஸ்வரூபத்தை அறியச் செய்து தர்மத்தை ஸ்தாபித்து, பிறகு தன் ஜோதிக்கு எழுந்தருளுகிறான். ஜீவனுடைய ஹ்ருதயத்தில் கட்டை விரல் அளவிற்கு பகவான் உறையும் நிலை *அந்தர்யாமித்வம்* எனப்படும்.

***அர்ச்சை*** என்னும் நிலையானது, பகவான் விக்கிரஹ ரூபமாக நாம் அர்ச்சிப்பதற்கு ஏற்றவாறு எடுத்துக்கொண்ட நிலையாகும். இது, பக்தி செய்வதற்கு ஏற்ற அனுகூலமான நிலை. அநேக மஹாத்மாக்கள், தங்களுக்கு என்று பூஜா க்ருஹத்தில் அர்ச்சாவதார மூர்த்தியை ஸ்தாபித்து அதனிடம் பக்தி செய்து ஸாக்ஷாத்தாக பேசியிருக்கிறார்கள். மீரா தனக்கென்று, 'கிரிதாரி' என்னும் க்ருஷ்ணனை அர்ச்சாரூபத்தில் பக்தி செய்தாள். நாமதேவர், துக்காராம், ஏகநாதர் போன்ற பக்தர்கள் பாண்டுரங்கனிடம் பக்தி செலுத்தினார்கள்.

இப்படி, மேன்மை பொருந்திய அர்ச்சாவதாரத்தின் மஹிமையை அனைத்து ஆழ்வார்களும் தங்களுடைய பாசுரங்களில் பாடியருளியிருக்கிறார்கள். இவ்வாழ்வார்களில், முதலாழ்வார்கள் என்று அழைக்கப்படும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் முதலியோர், பகவானுடைய பரதத்வ நிலையிலேயே ஊன்றி அர்ச்சாவதாரத்தை ஸேவித்தனர். திருமழிசையாழ்வார், பரதத்வத்திலும், அந்தர்யாமித்வத்திலும் ஊன்றி அர்ச்சாவதாரத்தை ஸேவித்தார். நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் முதலியவர்கள் விபவாவதாரங்களான ராமன், க்ருஷ்ணன் இவர்களிடமே ஈடுபட்டு அர்ச்சாவதாரத்தை ஸேவித்தனர். கடை ஆழ்வார்களான தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருப்பாணாழ்வார் மற்றும் திருமங்கையாழ்வார் முதலியவர்கள் அர்ச்சாவதாரத்தை மட்டுமே ப்ரதானமாக ஸேவித்து வந்தனர்.

இங்ஙனம், பகவானுடைய நிலைகளில் ஆழ்ந்து பக்தி செய்த ஆழ்வார்களுள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் இம்மூவரும் அனைத்து ஆழ்வார்களுக்கும் முற்பட்டவர்கள். எல்லா ஆழ்வார்களுக்கும் வழிகாட்டியாக பாசுரங்களை முதலாவதாக பாடி அருளினார்கள். அதனாலேயே முதலாழ்வார்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இம்மூன்று ஆழ்வார்களின் காலம், த்வாபர யுகத்தில் 8,62,900 வருடங்களுக்குப் பின் என்று ஸித்தாந்த ரீதியாக கூறுவது வழக்கம். பொய்கையாழ்வார் ''ஸித்தார்த்தி'' என்னும் வருடத்தில், ஐப்பசி மாதம் ஶுக்ல பக்ஷம், செவ்வாய்க்கிழமை, அஷ்டமி திதியுடன் கூடிய மங்களகரமான திருவோண நக்ஷத்திரத்தில் காஞ்சீபுரத்தில் உள்ள திருவெஃகாவில் பொற்றாமரைக்குளத்தில் பொற்றாமரையில் அயோனிஜராக விஷ்ணுவின் பாஞ்சஜன்யம் என்னும் ஶார்ங்கத்தின் அம்ஶமாக அவதரித்தார்.

பொய்கையாழ்வார் அவதரித்த அடுத்த நாள், அவிட்ட நக்ஷத்திரத்தில் திருக்கடல்மல்லை என்னும் க்ஷேத்ரத்தில் பகவானுடைய கௌமோதகீ என்னும் கதாயுதத்தின் அம்ஶமாக நீலோத்பலத்தினுள் பூதத்தாழ்வார் அவதரித்தார்.

பூதத்தாழ்வார் அவதரித்த அடுத்த நாள், சதய நக்ஷத்திரத்தில் பகவானுடைய நந்தகம் என்னும் வாளின் அம்ஶமாக பேயாழ்வார் திருமயிலையில் ஒரு கிணற்றில், செங்கழுநீர் புஷ்பத்தினுள் அவதரித்தார்.

இப்படி அயோநிஜர்களாக எம்பெருமானுடைய அம்ஸ பூதர்களான முதலாழ்வார்கள், பகவானுடைய கடாக்ஷத்தின் மூலம் உயர்ந்த ஞானமும் பக்தியும் கொண்டு, ரஜோகுண, தமோகுண ரஹிதர்களாக ஸத்வகுண பரிபூர்ணர்களாக விளங்கி, வைராக்ய சீலராய், உலக மக்களுடன் கலக்காமல், ஒரே இடத்தில் தங்காமல் ஸந்யாஸிகளைப் போல் தனித்தனியே இருந்து வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு நாளும் பகவானுடைய திருக்கோவில்கள் உள்ள திவ்யதேசங்களுக்குச் சென்று பகவானைப்பற்றி மங்களாஸாஸனம் செய்து அன்றைய இரவு கோவிலிலேயே தங்கி அடுத்த நாள் வேறு ஒரு திவ்யதேசத்திற்கு புறப்பட்டுச் செல்வர்.

இவ்வாறு, இம்மூவரும் ஒருவரை மற்றொருவர் பரிச்சயம் இல்லாமல் தனித்தனியே திரிந்து வாழும் காலத்தில், இவர்களைக் கொண்டு திவ்ய ப்ரபந்தங்களை லோகஹிதார்த்தமாக அருள பகவான் திருவுள்ளம் கொண்டு, இம்மூவரையும் ஓர் இரவு, ''திருக்கோவிலூர்'' என்னும் திவ்யதேசத்தில் சேர்த்து வைத்தான்.

முதலாவதாக அவ்வூருக்கு வந்தடைந்த பொய்கையாழ்வார், பகவானின் தரிசனம் செய்த பிறகு 'ம்ருகண்டு'' என்னும் முனிவருடைய ஆஶ்ரமத்தின் இடைகழியில் படுத்துக்கொண்டார். அடுத்ததாக பூதத்தாழ்வார், பகவானை ஸேவித்துவிட்டு அதே இடைகழிக்கு வந்து சேர்ந்தார். முன்னமே ஒரு வைஷ்ணவர் அங்கு படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்த பூதத்தாழ்வார், 'ஸ்வாமி! அடியேனும் இங்கு தங்கலாமோ?'' என்று கேட்க, பொய்கையாழ்வார் எழுந்து 'ஸ்வாமி! இந்த இடத்தில் ஒருவர் படுத்துக்கொள்ள முடியும். இருவராக இருந்தால் அமர முடியும். ஆகையால், நாம் இருவரும் இங்கே அமரலாம் என்று கூற பூதத்தாழ்வாரும் அவருக்கு நமஸ்காரம் செய்து அமர்ந்தார்.

இருவரும் பகவத் குணங்களைக் குறித்து பேசிக்கொண்டிருக்கும் பொழுது மூன்றாவதாக பேயாழ்வாரும் அங்கு வந்து சேர்ந்தார். பொய்கையாழ்வாரும், ''இங்கு ஒருவர் படுக்கலாம், இருவர் அமரலாம், மூவர் நிற்கலாம்'' என்று கூறி அவருக்கும் இடம் தர, மூன்று ஆழ்வார்களும் ஒருவருக்கொருவர் ஸேவித்து பின், நின்று கொண்டே பகவத் குணங்களை பேசலாயினர்.

பகவான் நாரதரிடம் சொல்லும்பொழுது,

*''நாஹம் வஸாமி வைகுண்டே ந யோகி ஹ்ருதயே ரவௌ ।*
*மத்பக்தா: யத்ர காயந்தி தத்ர திஷ்டாமி நாரத''* என்று சொல்கிறார்.

நாரதா, நான் வைகுண்டத்திலும் வஸிக்கவில்லை. யோகியின் ஹ்ருதயத்திலும் நான் வஸிக்கவில்லை. எங்கு என்னைப்பற்றி கானம் செய்யப்படுகிறதோ, அங்கு நான் இருப்பதை நீ பார்க்கலாம் என்று கூறுகிறார். அதை ஸத்யமாக்குவது போல், திருக்கோவிலூரில் வீற்றிருக்கும் எம்பெருமான் ''தேஹளீசன்'' தன்னுடைய மூன்று பக்தர்களுக்கும் அருள் செய்ய திருவுள்ளம் கொண்டு அவர்கள் தன்னுடைய குணங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும்பொழுது அவர்களின் நெருக்கத்தை விரும்பி தானும் அங்கு சென்று அவர்களை மேலும் நெருக்கினான்.


திடீரென்று யாரோ ஒரு புருஷன் தங்களை நெருக்குவதை உணர்ந்த அம்மூவரும், அவனைக் காண விருப்பங்கொண்டனர். அப்பொழுது பொய்கையாழ்வார், ''*வையம் தகளியா*'' என்று பாசுரம் பாட ஆரம்பித்து, வெய்ய கதிரோனை விளக்காக ஏற்றினார். பூதத்தாழ்வார், ''*அன்பே தகளியா*'' என்று ஆரம்பித்து ஞான விளக்கை ஏற்றினார். அவ்விருவரும் ஏற்றிய விளக்குகளினால் ஸ்ரீய: பதியான பகவானை நேரில் கண்ட பேயாழ்வார், ''திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன்'' என்று பகவானுடைய ஸ்வரூபத்தைப் பாடினார்.

*''வையம் தகளியா வார் கடலே நெய்யாக*
*வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய*
*சுடராழி யான் அடிக்கே சூட்டினேன் சொன் மாலை*
*இடராழி நீங்குகவே என்று''*

பொய்கையாழ்வார், இந்த பாசுரத்தில், ''வையம் தகளியா'' என்ற இந்த ப்ரபஞ்சமாகிய லீலாவிபூதியையும் (லீலாஸ்தானம்) ''வெய்யகதிரோன்'' மூலம் நித்ய விபூதியையும் (வைகுண்டம்) ஸ்மரித்து, பரம்பொருள் இவை இரண்டிற்கும் அதிபதி என்பதைக் காட்டுகிறார்.

*''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக*
*இன்புருகு சிந்தையிடுதிரியா - நன்புருகி*
*ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு*
*ஞானத் தமிழ் புரிந்த நான்''* என்று

பூதத்தாழ்வார், பாசுரத்தை அருளும் பொழுது, ''நாரணற்கு'' என்று சொல்வதன் மூலம் பரம்பொருள் ஸ்ரீமந்நாராயணன் தான் என்பதை ஸ்தாபிக்கிறார்.



''அன்பே தகளியா'' என்று கூறி அந்த பகவானை அடைய ப்ரேமபக்தியே உன்னதமான வழியென்றும் அருள்கிறார். இவ்விரு ஆழ்வார்களும் ஏற்றிய விளக்கில் பகவத் ஸ்வரூபத்தை தரிசித்த பேயாழ்வார்,

*திருக்கண்டேன்; பொன்மேனி கண்டேன், திகழும்*
*அருக்கண் அணிநிறமும் கண்டேன், செருக்கிளரும்*
*பொன்னாழி கண்டேன்; புரிசங்கம் கைக்கண்டேன்*
*என்னாழி வண்ணன் பாலின்று*

என்று திருவுடன் கூடிய நாராயணனை, பரமாத்மா என்று ஸ்தாபித்து பாடுகிறார்.

முதலாழ்வாரான பொய்கையாழ்வார், ''பகவானை ஸாக்ஷாத்தாக தரிசிக்கவேண்டும்'' என்ற ஞானோதயத்தை காட்டுகிறார். பூதத்தாழ்வார் ஞானம் முற்றி பக்தி நிலையைக்காட்டுகிறார். மூன்றாவதாக பேயாழ்வார் பக்தியின் மூலம் சாக்ஷாத்தாக திருமகள் கேள்வனான நாராயணன் வசப்படுவதைக் காட்டுகிறார்.

இம்மூவரின் ஸ்துதியைக் கேட்டு மகிழ்ந்த தேஹளீசன், அவர்களை கடாக்ஷித்து, எம்பெருமானின் பெருமைகளைப் பாடும் ''திவ்ய ப்ரபந்தங்களை'' அருளுமாறு ஆக்ஞையிட்டு அவர்கள் காணும்பொழுதே மறைந்தான். பகவானின் திவ்ய குணங்களை பொய்கையாழ்வார் ''முதல் திருவந்தாதியாகவும்'', பூதத்தாழ்வார் ''இரண்டாம் திருவந்தாதியாகவும்'' பேயாழ்வார், ''மூன்றாம் திருவந்தாதியாகவும்'' பரக்க பாடி தாங்கள் அனுபவித்த கல்யாண குணங்களை எல்லாம் மற்றோரும் அனுபவிக்கச் செய்தார்கள்.

பிறகு, திருக்கோவிலூர் தேஹளீசனுடைய அனுமதியின் பேரில் அங்கிருந்து கிளம்பி பல திவ்ய தேசங்களுக்கு ஆழ்வார்கள் மூவரும் ஒன்றாகவே சென்று தரிசித்தனர். சிறிது காலம் திருமழிசையில், திருமழிசையாழ்வாருடன் தங்கிருந்து பகவத் குணங்களை சேர்ந்து அனுபவித்த பிறகு மறுபடியும் திருக்கோவிலூரை அடைந்து பல காலங்கள் தியானத்திலேயே இருந்து அங்கிருந்தே ஸ்ரீவைகுண்டத்திற்கு சென்றனர். □

**- பாலாஜி**

# நக்ஷத்திரங்களின் பெருமைகளும் விளக்கங்களும் - 3

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
A. சுந்தரேச ஸர்மா வாஜபேயாஜி

## ம்ருகஸீர்ஷம்

இது ஸோமராஜாவை அதிபதியாக கொண்ட உயர்ந்த நக்ஷத்ரம். மஹா நக்ஷத்திரம் என்று ஜோதிடத்தில் சொல்லப்பட்டுள்ளது. வர வதூக்களில் ஒருவருக்கு ம்ருகஸீர்ஷம் என்றால் ஜாதகப் பொருத்தமே பார்க்க வேண்டாம், தாராளமாக சேர்க்கலாம் என்று கூறுவது மரபு. வ்ருஷப, மிதுன ராசிகளுக்குண்டான நக்ஷத்திரம். ஆகாசத்தில் தேங்காயின் மூன்று கண்கள் போன்ற தோற்றத்துடன் மூன்று நக்ஷத்திரங்களால் அடையாளங்காட்டக் கூடியது என்று வான சாஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள். இந்த நக்ஷத்ரத்தை மாசி 21-ந் தேதி முதல் பங்குனி 3-ந் தேதி முடிய, மாலை 6 மணியளவில் வானத்தில் நம் தலைக்கு மேல் உற்று நோக்கினால் காணலாம் என்றும் கூறுகிறார்கள்.

ம்ருகஸீர்ஷ நக்ஷத்திரத்திற்கு கூறப்பட்டுள்ள யாகத்தில் விசேஷமான ஹவிஸ் சொல்லப்பட்டுள்ளது. 'ச்யாமாகம்'' என்ற கம்பு தான்யம் போல், ஒரு புஞ்ஜை தான்யம் உள்ளது. அதை தீட்டிக் குத்தி எடுத்த அரிசியை பாலில் பக்குவம் செய்த ஹவிஸ்ஸால் யாகம் செய்யவேண்டும். இது ம்ருகஸீர்ஷ நக்ஷத்திர தேவதையான ஸோமராஜாவுக்கு பிடித்தமான ஹவிஸ். வைத்திய சாஸ்த்ரத்திலும் இந்த ஹவிஸ் மிகவும் குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியது என்று சொல்லப்பட்டுள்ளது. தான்யங்களில், உழுத இடங்களில் பயிர் பண்ணி வளர்வது, உழாமல் பயிர் பண்ணி வளர்வது என்ற இரண்டு விதங்களில், சாமை என்னும் தான்யம் உழாமல் பயிர் பண்ணி வளர்ப்பதாகும். இதை அக்ருஷ்டபச்யம் என்று சொல்வதுண்டு. இந்த தான்யங்களுக்கு அதிபதி ஸோமராஜா. அவருக்குப் பிடித்தமானது, இந்த சாமை தான்ய ஹவிஸ்.

ம்ருகஸீர்ஷ நக்ஷத்திர தேவதையின் ஸ்வரூபம் - வெள்ளை நிறம். இரண்டு கைகளில் உயர்ந்த தந்தத்தை வைத்திருப்பவர். பத்து குதிரைகள் பூட்டிய ரதத்தில் அமர்ந்திருப்பவர் என்று கூறப்பட்டுள்ளது. இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர், மிக ஸாமர்த்தியசாலியாக இருப்பார். எந்த

காரியத்தையும் முடித்துக் கொள்ளும் திறமை கொண்டவராக இருப்பார். நல்ல பேச்சாளி, முயற்சியுடையவர், ஐஸ்வர்யம் உடையவர். தனக்கு உண்டான சௌகர்யங்களை அனுபவிப்பவர். எனினும், சிறிது நிலையற்றவராக இருக்கலாம். தர்மங்களுக்குக் கட்டுப்படுவர்.

வ்ருஷப ராசியானால் உடம்பில் முதுகு, முகங்களில் வடு இருக்கக் கூடியவராகவும் ஸ்திரமான ஸ்நேஹிதர்களை உடையவராகவும், விகடம் செய்வதில் நாட்டம் உடையவராகவும், ஸ்த்ரீகளிடம் ப்ரியம் உள்ளவராகவும் இருப்பர். ம்ருகஶீர்ஷ நக்ஷத்திரம், செவ்வாய் க்ரஹத்தின் நக்ஷத்திரம். சற்று சிவந்த கண்களை உடையவர்களாக இருப்பர். படபடப்பு உடையவர். அக்ன்யுபாஸனத்திலும் ஸுப்ரமண்ய உபாஸனத்திலும் நாட்டம் உடையவர். இதனால் மிகவும் நன்மை அடைவர். வேதத்தில் ப்ரார்த்திக்கும் பொழுது மங்களகரமான இந்த ம்ருகஶீர்ஷ நக்ஷத்திர தேவதை ஜனங்களுக்கு நல்ல பலத்தையும், ஸந்ததிகளையும் அளிக்கட்டும். ஜனங்களுக்கு பரஸ்பரம் ப்ரியத்தை அளிக்கட்டும் என்று ப்ரார்த்திக்கப்படுகிறது.

புத்ர ப்ராப்திக்கான அனுஷ்டானம் செய்வதை ம்ருகஶீர்ஷ நக்ஷத்திரத்தில் செய்வதால் பலன் ஏற்படும். ஒருவருடன் ஸ்நேஹம் வைத்துக் கொள்ள உகந்த நக்ஷத்திரம் இது.

(தொடரும்)

---

க்ருஷ்ணா! என்னிடம் எவ்வளவோ குறைகள் உள்ளன. என்னைக் கண்டால் எனக்கே பிடிக்கவில்லை. இப்படியிருக்கையில், என்னை உனக்கு பிடிக்காமல் இருப்பதில் வியப்பில்லை. ஆனாலும் என் செய்வது? உன்னை எனக்கு மிகவும் பிடித்துள்ளதே!

-ஸ்ரீ ஸ்வாமிகள்

க்ருஷ்ணா, நான் இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்காதே. நான் எப்படி இருந்தால் உனக்கு சம்மதமோ அப்படி என்னை நீயே மாற்றி உன்னுடைய சொந்த ஜீவனாக வைத்துக் கொள்.

- ஸ்ரீ ஸ்வாமிகள்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள்

*கேள்வி : நான் இப்பொழுது தான் கொஞ்சம் கொஞ்சமாக தியானம் பழகி வருகின்றேன். ஆனாலும், தெய்வீக விஷயமாகவே பல குழப்பங்கள் ஏற்படுகின்றனவே?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : பலதரப்பட்ட தெய்வீக நூல்களை படிப்பதாலும் பலதரப்பட்ட தெய்வீக சொற்பொழிவுகளைக் கேட்பதாலும், நமக்கு தெரிந்த நண்பர்கள் பலர் பலவிதமான விஷயங்களை கூறுவதாலும், குழப்பம் ஏற்படுவது ஸகஜம் தான். கவலைப்பட வேண்டாம், என்ன குழப்பம் இருந்தாலும், நமக்கு, குரு எந்த மார்க்கத்தை உபதேசித்தாரோ அதில் தீவிரமாக சென்று கொண்டிருந்தால் குழப்பம் எல்லாம் தானாக போய்விடும். குழம்பித்தான் தெளியவேண்டும்.

*கேள்வி : வாழ்க்கையில் நம்மை விட தகுதியில் எல்லாவிதத்திலும் குறைவாக உள்ளவர்களுக்கு கீர்த்தியும், வசதிகளும் ஏற்படுவதைப் பார்த்து மனதில் சங்கடம் ஏற்படுகின்றதே! இதை எப்படி தவிர்க்கலாம்?*

பதில் : நம்மைக் காட்டிலும் அவருக்கு தகுதி எல்லாவிதத்திலும் குறைந்து இருந்தாலும் அவருக்கு பலவிதத்தில் சௌகர்யம் ஏற்படுகிறது என்றால், ஜன்மாந்திரத்தில் நம்மைக்காட்டிலும் அவர் அநேக புண்ணிய காரியங்களை செய்திருக்கக்கூடும். ஆகையால் தான் இன்று அவர் சௌகர்யமாக உள்ளார் என்று நினைத்து, மனதை ஸமாதானப்படுத்த வேண்டும்.

*கேள்வி : எந்த ஒரு உத்ஸவம் செய்தாலும் முடிவில் ஆஞ்சநேய உத்ஸவம் செய்வதன் தாத்பர்யம் என்ன?*

பதில் : சிரஞ்சீவியான ஹனுமாருக்கு சமமான புத்தியோ, பக்தியோ, வீரமோ, பலமோ, ப்ரஹ்மசர்யமோ, தபஸோ, சொல்லின் திறமோ, செயலின் திறமோ எவருக்கும் கிடையாது. ஆஞ்சநேயர், இராமாயணத்தில் ராமபிரானுக்காக அரிய பெரிய காரியங்களை சாதித்திருப்பதைக் காண்கிறோம். இப்படி எல்லாவிதத்திலும் மேன்மையாகவுள்ள ஹனுமாரைப் போல வினயம் உள்ளவரும் ஈரேழு உலகத்தில் கிடையாது.


பெரிய பெரிய உத்ஸவங்களையும் காரியங்களையும் முடித்த பிறகு நமக்கு இவ்வளவு பெரிய காரியங்களை சாதித்துள்ளோமே என்ற கர்வம் வரலாம். ஆனால், ஹனுமார் உத்ஸவம் கொண்டாடும் பொழுது அவரை ஸ்மரித்து, எல்லாவிதத்திலும் மேன்மையான இவர் எப்படி வினயமாக உள்ளார்; நாமும் ஏதோ பெரிதாக சாதித்து விட்டோம் என்று கர்வப்படாமல் ஹனுமாரைப்போல் வினயமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஆஞ்சநேய உத்ஸவம்.

*கேள்வி : உலகத்தில் `பக்தி ப்ரச்சாரம் இன்று எல்லாவிடத்திலும் நடந்து வருவது த்ருப்தி அளிப்பதாகத் தானே உள்ளது?*

பதில் : தெய்வீக வாழ்க்கையில் ஈடுபடும் அநேகர்கள், எந்த விதத்திலும் காரியங்களில் ஈடுபட (ப்ரச்சாரம் உட்பட) விரும்புவதில்லை. வெளியில் ப்ரச்சாரத்திற்கு வருபவர்களோ அனுஷ்டானத்தில் தாங்கள் சொல்லும் விஷயங்களை கடைபிடிப்பதில்லை. ஆகவே, இது போன்ற ப்ரச்சாரங்களால் ஒரு பயனும் இல்லை. ஹனுமார் கடலைத் தாண்டினார்; சீதையைக் கண்டார்; சஞ்சீவி பர்வதத்தை தூக்கி வந்தார்; அணை கட்டினார். இவ்வளவு அரிய காரியங்களைச் செய்த அவர் ஒரு க்ஷணம் கூட ராம நாமம் சொல்வதிலிருந்து விலகவில்லை. அதுபோல் காரியம் செய்கின்றேன் என்று ஸாதனைகளை விடக்கூடாது. ஸாதனை செய்கிறேன் என்று காரியங்களில் ஈடுபடாமல் இருக்கக் கூடாது. ஹனுமாரைப் போல் இருக்க வேண்டும்.

*கேள்வி : குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள எங்களுக்கு தாங்கள் கூற விரும்புவது என்ன?*

பதில் : தெய்வம், மஹா பக்தர்கள், யோகிகள் இவர்களிடம் தான் பேசுமே தவிர ஸாமான்ய ஜனங்கள் விஷயத்தில் பேசாது. மறைந்து இருப்பது தான் தெய்வத்தின் ஸ்வபாவம். ஆகவேதான், நாமும் ஒரு குருவின் துணைகொண்டு தெய்வத்தை வேண்டுகிறோம். எப்பேர்ப்பட்டவனையும் காலம் ஒரு க்ஷணத்தில் அதல பாதாளத்தில் தள்ளிவிடும். இப்பொழுது வசதியாகதான் உள்ளோமே என்று கர்வமாகவும், சும்மாவாகவும் இருந்துவிடக்கூடாது. எந்தெந்த வழிகளில் புண்யங்களை சம்பாதிக்க முடியுமோ அந்தந்த வழிகளில் அதை சம்பாதித்துக் கொள்ள வேண்டும். நாம் செய்யும் நல்ல காரியங்கள் தான் நம்மை ரக்ஷிக்கும்.



# பாவ லோகத்தில் ஒரு ஸஞ்சாரம் - 3

பல நாட்களாக, என் தோழி சித்ரலேகா, என்னை, அவளுடைய க்ருஹத்திற்கு அழைத்திருந்தாள். நானும், இன்று போகலாம், நாளை போகலாம் என்று நினைத்திருந்தேன். என்னமோ தெரியவில்லை, எனக்கு நேரமே ஒழியவில்லை. இன்று காலை, அவள் பிடிவாதமாக என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்று விட்டாள். அவள், சித்திரம் வரைவதில் கெட்டிக்காரி என்பது அவள் வீட்டிற்குச் சென்ற பிறகு தான் எனக்குத் தெரிய வந்தது. சுவர் முழுக்க, அவள் வரைந்த சித்திரங்களை மாட்டியிருந்தாள். வெண்ணை திருடும் கண்ணன், உரலில் சிக்குண்ட கண்ணன், மலையை தூக்கும் கோவர்தனதாரி, ராஸம் செய்யும் ராஸவிஹாரி, பள்ளி கொள்ளும் ஸ்ரீ ரங்கநாதர் என்று பல சித்திரங்கள் இருந்தன.

ஹ்ருதயத்தில் எப்பேர்ப்பட்ட ஒரு **பா**வம் அவளுக்கு! நான் அனைத்தையும் பார்த்து ஸ்தம்பித்து விட்டேன். சிறிது நேரம் அவளுடன் பேசிவிட்டு வந்தேன். வரும்பொழுது மாலை பொழுது ஆகிவிட்டதால், என் வீட்டில் நிறைய வேலை இருந்தது. எல்லாவற்றையும் முடித்து விட்டு மாடியில் உள்ள என் அறைக்குச் சென்றேன். உடம்பு மிகவும் அசதியாக இருந்தது. ஆனாலும், மனம் என்னவோ சித்ரலேகா வீட்டில் பார்த்த படங்களையே சுற்றி வந்தது.

அதை நினைக்க நினைக்க, நாமும் சித்திரம் வரைந்தால் என்ன என்று எனக்கு தோன்றிற்று. எந்த பெருமாளை வரையலாம் என்று யோசித்தேன்? ஆழ்வார்கள் அனைவரும் மயங்கியது ரங்கநாதனிடம் தானே! ஆசார்யர்கள் அனைவருடைய அவதார காரியமும் ரங்கநாதனை ஸேவித்த பிறகு தானே ஆரம்பமானது! நூற்றெட்டு திவ்யதேச பெருமாளும் ரங்கநாதனுக்குள் தானே அடக்கம். ஆண்டாளும் மையல் கொண்டது இவனிடம்தானே. கண்ணனாகத் தானே இவனை அநேகர் அனுபவித்துள்ளார்கள்! உலகிலேயே பெரிய கோயில் இவனுடையது தானே. பெரிய பெருமாளும் இவன்தானே. எனக்கென்னவோ இவனிடம் ஒரு தனி மயக்கமே ஏற்பட்டது.

ஸ்ரீ ரங்கநாதனை வரையலாம் என்று தீர்மானித்தேன். சிரஸிலிருந்து வரையலாம் என்ற முடிவிற்கு வந்தேன். சித்திரம் தீட்டுவதற்கு முன் என் கற்பனையை ஓடவிட்டேன். தலை நிறைய கேசங்கள், குடிலாளகபரனான ஸ்ரீ ரங்கநாதர். அதை பார்த்தவுடனேயே கைவிரல்களை பெருமாளின் கேசங்களுக்கு நடுவே கொடுத்து வருடியும் கொடுத்தேன்.

அழகாக ஒரு சாந்து கொண்டையும் போட்டு விடலாம் என்று நினைத்தேன். இவனோ படுத்துக் கொண்டுள்ளான். அதனால், கொண்டை சரியாக போட முடியாது என்று தீர்மானித்தேன். அகன்ற நெற்றியில் அழகிய திருமண். இந்த திருமண் யார் நெற்றியில் இருந்தாலும் அழகாக இருக்குமா? இல்லை இவன் நெற்றியில் இருப்பதாலேதான் அழகாகவுள்ளதா என்று புரியவில்லை.

சற்று கீழேயிறங்கி அவன் கண்களைப் பார்த்தேன். பகவானுடைய கண்களில் உள்ள கருணையை பலர் அனுபவித்துள்ளார்கள். சிலர் தாமரை போன்றுள்ளது என்கிறார்கள். சிலர், சூரிய சந்திரர்கள் போல் என்கின்றனர். ஆனால், என்னால் அவன் கண்களை நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை. ஒரு க்ஷணம் அந்த கண்களைப் பார்த்தால் கூட என் வசத்தில் நான் இல்லை. என்னையே நான் இழந்து விடுகின்றேன்.

அந்த தீர்க்கமான நாசிதான் எத்தனை அழகு. உடனே, என்னுடைய நாசியை ஆள்காட்டி விரலால் அளந்து பார்த்தேன். பெருமாளின் நாசியையும் அப்படி அளக்கலாம் என்று நினைத்து அளந்து பார்த்தால் சம்பந்தமே இல்லை. அப்படி ஒரு தீர்க்கமான நாசி அவனுடையது. கன்னங்களை கைவிரல்களால் தடவினேன். நான் அப்படி தடவிக் கொடுக்கும் பொழுது என் கை விரல்கள் அவன் கன்னத்தில் தெரிந்தன. கண்ணாடி அல்லது பளிங்கு என்று வர்ணிக்கலாமா என்றால், கண்ணாடியும், பளிங்கும் மிருதுவாக இராதே. அவன் கன்னங்களோ அவ்வளவு மிருதுவாக உள்ளனவே!

சிவந்த அதரத்தைக் கண்டதும் நான் நினைத்ததையெல்லாம் வெளியில் சொல்ல முடியாது. அவ்வளவு அந்தரங்கமானது அவை. பெருமாளுடைய கழுத்தில் வாடாத மாலை ஒன்று சாற்ற ஆசைக் கொண்டேன். என் இரு கரங்களால் அவன் கழுத்தைச் சுற்றி கோர்த்துக் கொண்டு மாலையாக்கினேன். அகன்ற வக்ஷஸ்தலத்தை பார்த்தவுடன் பெருமாளுடைய திருமார்பில் அப்படியே தலையை சாய்த்துக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது. தாயார் என்ன சொல்வார்களோ என்ற பயத்தில் அவரைப் பார்த்தேன். உனக்கு இடம் விட்டுத்தான் நான் வலது புறமாக உள்ளேன் என்று சொல்வது போல் தோன்றியது. உடனே, பெருமாளின் இடது மார்பில் தலையை சாய்த்து வைத்துக் கொண்டேன்.

ஆஹா என்ன ஆனந்தம்! என்னைப் போல் உலகில் பாக்யசாலியே கிடையாது. ஏன் என்றால், என் பெருமாளுடைய திருமேனியோ அப்ராக்ருதமானது. மனிதர்களாயிருந்தால், அவர்கள் சரீரத்தில் துர்நாற்றம் வரும், வியாதி வரும், மூப்பு வரும், மரணம் வரும். ஆனால், எனக்கு கிடைத்துள்ள பெருமாளின் திருமேனியோ அப்ராக்ருதமானது.

அவனிடமிருந்து எப்பொழுதும் சுகந்தமான வாஸம் வரும், அவனுக்கு மூப்பு, வியாதி, அழிவு என்றும் கிடையாது.

ஆகவே, என்னுடைய ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை என்று நினைக்கையில் திடும் என்று மனதில் ஒரு எண்ணம் ஓடியது. 'பெருமாளுடைய திருமேனிதான் அப்ராக்ருதமானது. நீயோ ப்ரக்ருதே சரீரம் உடையவள். உனக்கு மூப்பு, வியாதி, மரணம் எல்லா உண்டே, என் செய்வாய்' என்றது அந்த எண்ணம்.

இப்படி நான் நினைக்கையில், பெருமாளின் தீர்க்கமான ஸ்வாசம் என் விரல் மீது பட்டு என் உடல் முழுவதும் பரவியது. என்ன ஆச்சர்யம்! எனக்கும் அப்ராக்ருதமான திருமேனி சித்தித்து விட்டது. ஆஹா! எனக்கும், என்றும் அழிவில்லை. ஆகவே, எங்களுக்குள் பிரிவேயில்லை. திடும் என்று என் சிந்தனை கலைந்த பொழுது, கோவில் ஒலி பெருக்கி, '*அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு*' என்று பாசுரத்தின் வரிகளை ஒலித்தது என் காதில் விழுந்தது மிகவும் பொருத்தமாகவே இருந்தது.

**-ஸ்ரீ க்ருஷ்ண பாதரேணு**

---

# ஸ்ரீ க்ருஷ்ண பக்தி

*க்ருஷ்ணம் கமல பத்ராக்ஷம் நார்சந்தியெ நரா: ।*
*ஜீவந்ம்ருதாஸ்து தெ க்ஞேயா: ந ஸம்பாஷ்யா: கதாசந ॥*

மஹா பாரதம் - ஸபாபர்வா - 62 அத்யாயம்.

''எந்த மனிதர்கள், தாமரைக் கண்ணனான ஸ்ரீ க்ருஷ்ணனை பூஜிக்கவில்லையோ அந்த மனிதர்கள் உயிர் இருந்தும் இறந்தவர்களே. ஒரு பொழுதும் அவர்களுடன் நாம் பேசக்கூடாது'' என்கிறார் ஸ்ரீ வ்யாஸர்.

ஸ்ரீ ஆதிஶங்கரரும் இதையே பஜகோவிந்தத்தில், ''ஒரு முறையாவது ஜன்மாவில் ஸ்ரீ க்ருஷ்ணனை பூஜை செய்தாயானால் யம லோகத்தில் யமனுடன் சர்ச்சை ஏற்படாது'' என்பதை ***''ஸக்ருதபி யே ந முராரிஸமர்சா''*** என்று சொல்கிறார்.

அதனால், ப்ரதி தினமும் ஸ்ரீ க்ருஷ்ணனை பூஜை செய்யவேண்டும் என்று தெரிகிறது. இதை அறிந்தும், ஸ்ரீ க்ருஷ்ணனை பூஜை செய்யாமல் யாராவது இருப்பார்களா! நிஶ்சயம் பூஜை செய்வார்கள்.

**- T. கண்ணன் தீக்ஷிதர்**



# வேத கதைகள் - 4

- தர்மக்ஞர் மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள்

## பரத்வாஜர் கதை

பரத்வாஜர் என்ற முனிவர் நூறு வயது வரை திருமணம் செய்து கொள்ளாமல் ப்ரஹ்மசாரியாகவே வேதம் பயின்று வந்தார். இவ்விதம் வேதத்திற்காகவே யாவற்றையும் தியாகம் செய்த அம்முனிவரை, சொர்க்கம் அழைத்து செல்ல இந்திரன் வந்தான். அப்பொழுது, 'இன்னும் வேதம் பயில வேண்டும். ஆதலால், மற்றொரு மனிதனின் ஆயுளை அளிப்பாயாக! அதிலும், நான் வேத அத்யயனம் செய்யப்போகிறேன்' என்று வேண்டினார். அவர் வேண்டுகோளுக்கு இணங்கி, இந்திரன், மறுபடியும் 100 வயது அளித்தான். அந்த நூறு வயதிலும் அவர் எல்லாவற்றையும் துறந்து வேத அத்யயனம் செய்தார். 200 வயது முடிந்த பிறகு இந்திரன் முறுபடியும் வந்து அழைத்தான். வேத அத்யயனம் செய்வதற்காக மறுபடியும் 100 வயது வேண்டினார். இந்திரனும் அவருக்கு மேலும் 100 வயது அளித்தான். இவ்விதம் 300 வயது வாழ்ந்து உடல் இளைத்து, எழுந்திருக்கக் கூட சக்தி இல்லாமல் படுத்துக் கொண்டே வேத அத்யயனம் செய்து கொண்டிருக்கிற முதிர்ந்த கிழவரான அவரை இந்திரன் சொர்க்கத்திற்கு அழைத்தான். அப்பொழுதும், வேத அத்யயனம் முற்று பெறாததால், நான்காவது முறையாக 100 வயது வேண்டினார். வயது அளித்தால் என்ன செய்வீர்? என்று இந்திரன் பரத்வாஜரை வினவினான். இந்த நான்காவது நூற்றாண்டிலும் நான் ப்ரஹ்மசாரியாகவே இருந்து வேதம் கற்பேன் என்று சொன்னார். அப்பொழுது, இந்திரன் வேதங்களை மூன்று மலைகள் போல் தோற்றம் அளிக்குமாறு பரத்வாஜருக்கு காட்டினான்.

''பரத்வாஜ முனிவரே! உங்களால் கற்க வேண்டிய வேதங்கள் இந்த மலைகள் போல் இருக்கின்றன. தாங்கள் இந்த மூன்று நூற்றாண்டுகளில் கற்ற வேத பாகம் மூன்று பிடி அளவுதான் உள்ளது. கற்கவேண்டிய வேத பாகங்கள் மூன்று மலைகள் போல் அளவற்று இருக்கின்றன. வேதங்களுக்கு முடிவே கிடையாது. ஆதலால், தங்களுக்கு எவ்வளவு கோடி வயது அளித்தாலும் வேதம் முற்று பெறாது'' என்று அவருக்கு சாவித்திர வித்தை என்னும் ஒரு உபாஸனத்தை உபதேஸித்து அவரை சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றான்.

இந்த வேத கதையை மனதில் கொண்டுதான் ஔவைபிராட்டி, ''*கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகளவு;* என்று கூறியுள்ளார். ஔவை கூறியதற்கு, இந்த பரத்வாஜ கதைதான் மூல காரணமாகும். மற்றும், ஒரு ப்ராஹ்மணன் தினந்தோறும் மூன்று வேதங்களையும் விடாமல் அத்யயனம் செய்துவர வேண்டும். அப்படிச் செய்து, ரிக் வேதம் ஓதினால் பால் ஆறாக ஓடும். யஜுர் வேதம் ஓதினால் நெய் ஆறாக ஓடும்; ஸாம வேதம் ஓதினால் ஸோம ரஸம் ஆறாக ஓடும்; மற்ற பாகங்களை ஓதுவதனால் தேனாறு ஓடும் என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளன.

ராமன் சித்ரகூட பர்வதம் சென்றபொழுது, பரதன், ராமனை அழைக்க சித்ரகூடம் செல்லும் வழியில் இந்த பரத்வாஜ முனிவரை சந்திக்கிறான். பரத்வாஜ முனிவரும், பரதனின் ராம பக்தியை வியந்து கொண்டாடி அவனுக்கு ஓர் உயர்ந்த விருந்து அளித்தார். அதில், பால், நெய், தயிர் இவைகள் ஆறாக ஓடின என்று இராமாயணத்தில் அயோத்யா காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. தினந்தோறும் விடாமல் வேதங்களை ஓதுவதால் நெய், பால் இவைகள் ஆறாக ஓடும் என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. பரத்வாஜரின் வாழ்க்கையிலேயே இது நிரூபணமும் ஆகியது. இவ்விதம், வேதத்திற்காகவே வாழ்நாள் முழுவதும் செலவிட்டு, பிறகு ராமன், பரதன் இருவருக்கும் விருந்து அளித்து சரித்திரத்தில் அழியாத இடம் பெற்றவரானர் பரத்வாஜர்.

*''பரத்வாஜோ த்ரிபி: ஆயுர்பி:*
*ப்ரஹ்மசர்யம் உபவாஸ:''*

என்று ஆரம்பித்து வேதம் இந்த வரலாற்றை விரிவாக கூறுகிறது. இந்த கதையால் வேதம் அளவற்றது என்றும், பரத்வாஜர் போன்ற முனிவர்கள் வேதத்திற்காகவே பாடுபட்டனர் என்றும், வேதத்தால் வாழ்க்கையில் ஸாதிக்க முடியாதது ஒன்றுமில்லை என்றும் பல அரிய உண்மைகளை அறிந்து கொள்கிறோம். □

---

பல பேர்கள், ஒரு இடத்தில் அடிக்கடிக் கூடி ப்ரார்த்தனை செய்கிறார்கள். நாம் அவ்விடத்திற்குச் சென்றால் உடனே நாமும் அங்குள்ள இறைவனை நமஸ்கரித்து வணங்க வேண்டும். இறைவன் கருணை உள்ளவராக இருப்பதால், நிச்சயமாக அவருடைய சாந்நித்யம் அங்கு அதிக அளவில் வெளிப்படும்.

- ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர்

# நாம ஸங்கீர்த்தன யாத்திரை

நம் ஸ்வாமிகள், ஜூலை மாதத்தில், சீர்காழியை அடுத்துள்ள திருவாலி, திருநகரி, திருத்தெற்றியம்பலம், திருச்செம்பொன்கோயில், திருத்தேவனார்தொகை, திருநாங்கூர் க்ஷேத்ரத்தில் உள்ள திவ்ய தேசங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள எம்பெருமானையெல்லாம் ஸேவித்து வந்தார்கள். மேற்படி கோவில்கள், க்ஷீண தசையில் இருப்பதைக் கண்டு, நாம ஸங்கீர்த்தனம் செய்வதால் மட்டுமே கோவில்களின் ஸாந்நித்யம் அபிவிருத்தியாகும் என்று நம் சத்சங்கத்தைச் சார்ந்த அன்பர்களை இந்த கோவில்களுக்குச் சென்று நாம ஸங்கீர்த்தனம் செய்ய நியமித்தார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞைபடியே, பக்தர்கள், குழுவாக 25-7-97 அன்று இரவு புறப்பட்டு, 26-7-97 அன்று காலை திருநகரி சென்றடைந்தோம். திருநகரி கோவில் முன் இருக்கும் சென்னையைச் சார்ந்த T.T.T.D சபா சத்திரத்தில் தங்கி, மேற்படி கோவில்களில் குறைந்த பட்சம் 1½ மணிநேரம் *"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே, ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"* என்று நாம ஸங்கீர்த்தனம் செய்வதாய் தீர்மானித்து, முதலில் திருநகரியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கல்யாண ரங்கநாதரை தரிசித்து, பெருமாளின் சுற்று ப்ராகாரத்தில் இருக்கும் ஸ்ரீ நரஸிம்ம ஸந்நிதி முன்பாக அமர்ந்து 6.45 மணி முதல் 8.15 மணி வரை நாம கீர்த்தனம் செய்தோம்.

பிறகு, ஸ்ரீ கல்யாண ரங்கநாதரை ஆனந்தமாக ஸேவித்தோம். ஆத்மநிவேதன ஸ்தோத்திரம் சொன்னோம். எம்பெருமானின் திருநாமம், வயலாளி மணவாளன் என்பதாகும். உத்சவ மூர்த்தியின் பெயர் வேதராஜன் (வேதநாதன்). தாயாரின் திருநாமம் அமிர்தவல்லி. தாயார் தனிச்சந்நிதியில் இருக்கிறார். மூலவர், ஸ்ரீதேவி, பூதேவி ஸமேதராக கல்யாண திருக்கோலத்தில் இருக்கிறார். இங்ஙனம் தரிசித்து, திருமங்கையாழ்வார் ஸந்நிதிக்கு வந்தோம். திருமங்கையாழ்வார், குமுதவல்லி நாச்சியாரோடு எழுந்தருளியிருக்கிறார். ஆழ்வாரருகில் அவர் ஆராதித்து வந்த 'சிந்தனைக்கினியான்' ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் இருக்கிறார். ஆழ்வார், தன் கையில் திவ்யப்ரபந்தம் வைத்துக்கொண்டிருக்கிறார். மற்றொரு கையில் வைரவேல். திருவடியில் தண்டை. இவ்விரண்டும் திருஞானசம்பந்தர், ஆழ்வாருக்கு கொடுத்ததாகும். ஆழ்வாரின் திருமார்பில் நம்மாழ்வார் இருக்கிறார்.

இந்த க்ஷேத்ரத்தின் அருகிலுள்ள வேதராஜபுரம் என்னும் இடத்தில் தான் திருமங்கையாழ்வார் பெருமாளை வழிப்பறி செய்ய, பெருமாள் ஆழ்வாருக்கு திருமந்திர உபதேசம் செய்தார். ஸ்ரீரங்கநாதர், இளம் தம்பதியராக ஆழ்வாருக்கு காட்சியளித்து தடுத்தாட்கொண்டார். திருமணக்கோலத்தில் காட்சியளித்ததால் இப்பெருமானுக்கு கல்யாண ரங்கநாதர் என்ற பெயர் ஏற்பட்டது. இந்த க்ஷேத்ரத்தில் ''*வாடினேன் வாடி வருந்தினேன்...*'' ''*ஆவியே அமுதே...*'' என்ற பாசுரங்களை ஸேவித்தோம்.

பிறகு, திருநாங்கூர் க்ஷேத்ரத்திற்குக் கிளம்பினோம். போகும் வழியில், திருமங்கையாழ்வாரின் அவதார ஸ்தலமாகிய திருக்குறையலூர் என்னுமிடத்தை அடைந்தோம். அங்கு உக்ரநரசிம்ம பெருமாளையும் ஸ்ரீ மஹாலக்ஷ்மி தாயாரையும் ஸேவித்தோம். பெருமாள், தன் திருமார்பில் முக்கோண சக்கரத்துடன் மனதை விட்டு அகலாத ஸேவை ஸாதித்தார். அங்கிருந்து கிளம்பி திருநாங்கூரில் உள்ள திருமணிமாடக்கோவில் என்னும் திவ்ய தேசத்திற்கு பகல் 11 மணிக்கு சென்றடைந்தோம். மூலவரான பத்ரிநாராயணனையும் (நர நாராயணர்) மற்றும் புண்டரீகவல்லி தாயாரையும் ஸேவித்தோம். இங்கிருக்கும் உத்ஸவரை திருமங்கையாழ்வார், ''நந்தா விளக்கே' என்று பாசுரம் பாடி மங்களாஸாஸனம் செய்திருக்கிறார். பத்மாஸனத்தில் வீற்றிருக்கும் மூலவரின் திருக்கோலமும், பெருமாளின் திருமுக மண்டலமும், திருவடி ஸேவையும் மனதில் நிற்கின்றன. உத்ஸவர் அபய ஹஸ்தத்தில் ப்ரயோக சக்ரத்தை ஏந்திக்கொண்டு இருக்கிறார். ஆழ்வார், ஒரு பாசுரத்தில் தாயாரையும் சேர்த்து பாடியிருப்பது சிறப்பானதாகும். பெருமாள், இன்றும் மதங்க மஹரிஷிக்கு ப்ரத்யக்ஷமாக இருக்கிறார்.

இங்குள்ள விசேஷம் என்னவென்றால் தை அமாவாசைக்கு மறுநாள் திருநாங்கூரில் 12 கருட ஸேவை நடக்கும். திருநாங்கூரைச் சேர்ந்த 11 திவ்ய தேசத்து பெருமாள்களும் கருட வாஹனங்களில் எழுந்து அருளுவார்கள்.

திருநகரியிலிருந்து திருமங்கையாழ்வார், குமுதவல்லி நாச்சியாருடனும் உத்ஸவ பெருமாளுடனும் இந்த நாராயண பெருமாள் கோவிலில் வந்து எல்லா பெருமாளையும் தனித்தனியாக ப்ரதக்ஷிணம் செய்து ஸேவிப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இந்த க்ஷேத்ரத்தில் 1½ மணி நேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்தோம். பிறகு, அங்கிருந்து கிளம்பி திருஅரிமேயவிண்ணகரம் சென்று அங்கு

வீற்றிருக்கும் ஸ்ரீதேவி, பூதேவி ஸமேத குடமாடும் கூத்தரை தரிசித்தோம். சதுர்புஜ கோபாலன், ஸ்ரீதேவி பூதேவிமார்களோடு உத்ஸவராக எழுந்தருளியிருக்கிறார். அம்ருதகடவல்லி தாயாருக்கு தனிச்சந்நிதி உள்ளது. இங்கு பெருமாள், தனது வலது காலை குடத்திற்குள் வைத்துக்கொண்டிருக்கிறது விசேஷம். இங்கும் 1½ மணிநேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்தோம்.

அங்கிருந்து கிளம்பி, திருமங்கையாழ்வார், பாகவதர்களுக்கு ததியாராதனை நடத்தின மங்கைமடம் என்னுமிடத்திற்குச் சென்றோம். கர்ப்பக்ருஹம் சிதிலமடைந்து இருப்பதால் மூலவர்கள் வீரநரசிம்மரும் மஹாலக்ஷ்மி தாயாரும் பாலாலயம் செய்யப்பட்டு தனி மண்டபத்தில் வீற்றிருக்கிறார்கள். பெருமாளும், உடையவரும் சாளக்ராம திருமேனியாக இருக்கிறார்கள். பெருமாள் திருமடியில் மஹாலக்ஷ்மி தாயார் இருக்கிறார். திருமார்பில், முக்கோணசக்கரம் இருக்கிறது. ஆழ்வார், குமுதவல்லி நாச்சியாரோடு பெருமாளருகில் இருக்கிறார். மணவாள மாமுனிகள், விஷ்வக்ஸேனர், நம்மாழ்வார், கருடாழ்வார் முதலியவர்களும் எழுந்தருளியிருக்கிறார்கள். பிறகு திருநகரிக்குத் திரும்பி மறுபடியும் திருநாங்கூரில் உள்ள திருமணிக்கூடத்தை அடைந்தோம். இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவரதராஜ பெருமாளையும் ஸ்ரீதேவி பூதேவி நாச்சியார்களையும் தரிசித்தோம். மூலவர் மணிக்கூடநாயகன், நின்ற கோலத்தில் ஸேவை ஸாதிக்கின்றார். உத்ஸவ மூர்த்திகள், வண்புருஷோத்தமன் சந்நிதியில் எழுந்தருளப் பண்ணி இருக்கிறார்கள். இங்கு 1 மணி நேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்தோம். இந்த க்ஷேத்ரத்தில் *"தூம் படைப்பனை...."* என்ற பாசுரத்தை ஸேவித்தோம்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டு, திருச்செம்பொன்செய்கோவில் சென்றடைந்தோம். அங்கிருக்கும் "பேரருளாளன்" ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் நின்ற கோலத்திலிருப்பதை தரிசித்தோம். உற்சவர் செம்பொன்ரங்கர், ஸ்ரீதேவி பூதேவியோடு இருக்கிறார். "அல்லிமாமலர் தாயாருக்கு" தனிக்கோவிலிருக்கிறது. இங்குள்ள விசேஷம் என்னவென்றால் ராவணனைக் கொன்ற ப்ரஹ்மஹத்தி தோஷம் நீங்குவதற்காக ராமன் இங்கு தங்கி, 'த்ருட நேத்ரர்' என்னும் முனிவர் சொல்படி ஆயிரம் பொன் கொண்ட பசுவை வைத்து யாகம் செய்து அதில் பாதியை ப்ராஹ்மணர்களுக்கு தானம் செய்து மீதியை வைத்து இந்தக் கோவிலின் கர்ப்ப க்ருஹம், மண்டபங்கள் முதலியவற்றை கட்டினதாக ஐதீகம். பொன் வைத்துக் கட்டினதால் செம்பொன்செய்கோயில் என்ற பெயர்

ஏற்பட்டதாம். பெருமாள், கௌசிகருடைய புத்திரர் த்ருடநேத்ர மஹரிஷிக்கு ப்ரத்யக்ஷமாக இருக்கிறார். இந்த பெருமாள் நிறைய திருவாபரணங்கள் சாற்றிக் கொண்டு மிகவும் ரம்யமாக ஸேவை ஸாதித்துக் கொண்டிருக்கிறார். காஞ்சீபுரத்திலிருந்து வந்த காச்யபர் என்னும் அந்தணரின் மூத்த மகன் முகுந்தன் இங்கு அஷ்டாக்ஷர மந்த்ரத்தை 32 ஆயிரம் தடவைகள் ஜபித்து பின்பு ஊருக்கு செல்லும் வழியில், மிகப்பெரிய புதையல் கிடைத்ததாக ஸ்தல புராணம் உள்ளது.

தாயாரும், பெருமாளும் தங்கள் குளிர்ந்த கடாக்ஷத்தால் பக்தர்களின் மனதை குளிரச் செய்துவிடுவார்கள். இங்கு ஒரு மணி நேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்தோம். இங்குள்ள விசேஷம், திருமணி மாடக் கூடத்திலிருந்து தொடங்கி தான், 11 திவ்யதேச பெருமாளும் எழுந்தருளப்பண்ணி கருட வாஹனத்தில் ஸேவை ஸாதிக்க உத்ஸவம் ஆரம்பமாகுமாம்.

இங்கு *''பேரணிந்து''*, *''உலகத்தவர்''* என்னும் பாசுரங்களை ஸேவித்தோம். பிறகு அங்கிருந்து புறப்பட்டு திருவைகுந்த விண்ணகரம் ''வைகுண்டநாதர்'' கோவிலுக்கு புறப்பட்டோம். தாமரைக் கண்ணுடைய ஸ்ரீ வைகுண்டநாதர், வைகுந்தவல்லி என்னும் ஸ்ரீதேவி மற்றும் பூதேவி நாச்சியார்களுடன் எழுந்தருளியிருக்கிறார்கள்.

உத்ஸவ மூர்த்தி பரமபதநாதன், ஸ்ரீதேவி பூதேவி தாயார்களுடன் ஸேவை ஸாதிக்கிறார். எம்பெருமான் மேல் ஆதிசேஷன் இருக்க, பெருமாள் வலது காலை மடக்கிக் கொண்டு இடது காலை தொங்கவிட்டு தலையை ஒருபுறமாக சாய்த்தபடி இங்கு அழகாக ஸேவை ஸாதிக்கிறார். இங்கு 1½ மணி நேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்தோம். *'சலங்கொண்ட ஹிரண்யனது'* என்னும் பாசுரத்தை ஸேவித்தோம்.

காரிருள் மேகங்கள் இடியுடன் வந்தமையால். திருவண் புருஷோத்தமத்திற்கு உடனடியாக புறப்பட்டுச் சென்றோம். மூலவர் வண்புருஷோத்தமன், ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் நின்ற கோலத்தில் ஸேவை ஸாதிப்பதை தரிசித்தோம். இப்பெருமாள், ஆழ்வாருக்கு ராமனாக காட்சியளித்ததாகச் சொல்வர். பகவானுடைய திருமுக மண்டலம் மிகவும் அழகாக இருக்கிறது. மனதை விட்டு அகலாமல் திரும்பத் திரும்ப ஸேவிக்க வேண்டும் என்ற ஆசை இருந்து கொண்டே இருக்கிறது. பெருமாள் பக்கத்தில் ஆண்டாள், காவலம்பாடி கண்ணன், ருக்மிணி, சத்யபாமாவுடன், ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியார்களுடன் ஸ்ரீவரதராஜன், கடலடைத்த பெருமாள், மற்றும்

ஆழ்வார்கள், ஆசாரியார்கள் பலர் எழுந்தருளியிருக்கிறார்கள். இங்கு திருநாங்கூரில் உள்ள ஏனைய க்ஷேத்ரத்தின் உத்ஸவ மூர்த்திகள் எழுந்தருளப்பட்டிருக்கின்றனர். இங்கு 2 மணி நேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்தோம்.

திருமணிமாடக்கோவில், திருஅரிமேயவிண்ணகரம், திருத்தெற்றியம்பலம், திருவண்புருஷோத்தமம் இவை நான்கும் திருநாங்கூரில் ஒரே வீதியில் அருகருகில் உள்ளன. பிறகு, இரவு திருநகரிக்குத் திரும்பினோம்.

மறுநாள் 27-7-97 அன்று காலையில், நாங்கள் தங்கியிருந்த சத்திரத்திற்கு எதிரில் எங்களுக்குத் தங்குவதற்கு வசதிகளை செய்த க்ருஹத்தில் அரை மணி நேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்தோம். பிறகு திருவாலிக்கு புறப்பட்டுச் சென்றோம். திருவாலியில் மூலவர் நரசிம்மர் ஸ்ரீ மஹாலக்ஷ்மியை வலதுபுறம் ஆலிங்கனம் செய்து ஸேவை ஸாதிக்கின்றார். ஸ்ரீ மஹாலக்ஷ்மி, கூப்பிய கைகளுடன் விளங்குகின்றார். உத்ஸவர், திருவாலிநகராளன், ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியார்களுடன் வீற்றிருக்கிறார். க்ஷேத்ரத்தின் விசேஷம் திருமங்கையாழ்வார் ஆராதனை செய்து வந்த ஐந்து பெருமாள் மூர்த்திகளில் திருவாலி பெருமாளும் ஒருவராவார். சந்நிதியின் வெளியே பூர்ண மஹரிஷி (அமிர்தவல்லி தாயாரை வளர்த்தவர்), பிரஹ்லாதாழ்வார், நம்மாழ்வார், மணவாள மாமுனிகள் ஆகியோர் வீற்றிருக்கின்றனர்.

பெருமாள் மிகவும் ஸௌலப்யத்துடன் ஸேவை ஸாதிக்கிறார். *"வந்து உனதடியேன்...", "கள்வன் கொள்வானை அறியேன்.."* முதலிய பாசுரங்களை ஸேவித்தோம். க்ஷேத்ரத்தின் மற்றொரு விசேஷம், திருமங்கையாழ்வாரின் தேவியார் குமுதவல்லி இவ்விடத்தில்தான் வளர்க்கப்பட்டார். திருவாலி, திருநகரி இரண்டும் ஒரே திவ்ய தேசமாக கருதப்படுகிறது. இங்கு 1½ மணி நேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்தோம். பிறகு, திருவாலியிலிருந்து திருத்தேவனார்தொகைக்கு (கீழச்சாலை) புறப்பட்டோம்.

திருத்தேவனார்தொகையில் மூலவர் தெய்வநாயகன், ஸ்ரீதேவி பூதேவி தாயார்களுடன் நின்ற கோலத்தில் ஸேவை ஸாதிக்கின்றார். தாயாருக்கு தனிக்கோவில் இருக்கிறது. தாயாருக்கு கடல்மகள் நாச்சியார், மாதவநாயகி என்ற பெயர்களும் உண்டு. உத்ஸவர், மாதவ பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் வீற்றிருக்கிறார்.

இங்குள்ள விசேஷம், இந்த பெருமாளை திருமங்கையாழ்வார் ராம, க்ருஷ்ண, நரஸிம்ம அவதாரங்களாக அனுபவித்து மங்களாஸாஸனம் செய்திருக்கிறார். தேவேந்திரனுக்கு இங்கு பெருமாள் ப்ரத்யக்ஷம் *'போதலர்ந்த பொழிற்சோலை'* என்ற பாசுரத்தை ஸேவித்தோம். இங்கு, 1½ மணி நேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்தோம்.

திருத்தேவனார்தொகையிலிருந்து புறப்பட்டு, 'அண்ணன் கோவில்' என்றழைக்கப்படும் திருவெள்ளக்குளம் என்னும் திவ்ய தேசத்தை அடைந்தோம். மூலவர் அண்ணன் பெருமாள் (நாராயணன்) அலர்மேல்மங்கை தாயாருடன் நின்ற கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். உத்ஸவர் ஸ்ரீநிவாஸப்பெருமாள், பத்மாவதி தாயாருடன் விசேஷமாக கடாக்ஷிக்கிறார். இங்கு தான் குமுதவல்லி நாச்சியார் அவதாரம் செய்தார். குமுத புஷ்பத்துடன் கண்டெடுக்கப்பட்டதால் குமுதவல்லி என்னும் நாமம் சூட்டப்பட்டு வளர்ந்து திருமங்கையாழ்வாருக்கு மணம் செய்விக்கப்பட்ட ஸ்தலம் இதுதான். இங்கு பகவானின் புஷ்கரணிக்கு தனிச்சிறப்புண்டு. பெருமாள், ஸ்வேத மஹாராஜாவிற்கு ப்ரத்யக்ஷமாக இருக்கிறார்.

ஒரு ஸமயம், ஆயுள் வேண்டி ஸ்வேத மஹாராஜா ஒற்றைக்காலில் நின்று ம்ருத்யுஞ்ஜய மந்திரம் ஜபித்து தபஸ் செய்தார். பகவான் அவர் தபஸுக்கு மனமிரங்கி என்றும் சிரஞ்சீவியாக இருப்பாய் என்று வரம் கொடுத்தார். மஹாராஜா தனக்கு மட்டுமன்றி, பெருமாளை ஸேவிக்கவரும் பக்தர்கள் அனைவருக்கும் நீண்ட ஆயுள் தர வேண்டிக்கொண்டான். இங்கு *'கண்ணார்கடல் போல்...'* என்னும் பாசுரத்தை ஸேவித்தோம். ஸ்ரீநிவாஸப்பெருமாள் பத்மாவதி தாயாருடன் கல்யாண கோலத்தில் திவ்யமான ஸேவை ஸாதித்தார்கள்.

இந்த பெருமாளை, திருப்பதி ஸ்ரீநிவாஸனாகவும், திருச்செம்பொன் கோவில் பேரருளாளனை, காஞ்சீபுரம் வரதராஜனாகவும் திருத்தெற்றியம்பலம் ரங்கநாதனை ஸ்ரீரங்கநாதனாகவும் தரிசித்து, திருமங்கையாழ்வார் மனங்களித்து பாசுரங்களை அருளியிருக்கிறார். இங்கு 1½ மணிநேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்தோம்.

(தொடரும்)

**-பத்மாவதி ராஜப்பன்**

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 25

- தொடர்ச்சி

*காந்த மிரும்புபோற் கவர்ந்தெனை விடாமற்*
*கலந்தெனோடிருப்பா யருணாசலா* 16

உலகத்தில், பகவானை பக்தி பண்ணவேண்டும் என்னும் ஆசை ஒருவனுக்கு உதிப்பதற்குக் காரணம், பகவான் தான். இதைத்தான் *"அவனருளாலே அவன் தாள் வணங்கி"* என்கிறார்கள், மெய்யடியார்கள். இப்படி, ஈஸ்வர அனுக்ரஹத்தினால் பக்தி உதிக்கப்பெற்றவன் இறைவனை நோக்கி அவனுடைய தரிசனத்திற்காக பலவிதமாக இறைஞ்சுகின்றான்.

பக்தன், இறைவனுக்காக கதறியும், அழுதும், பலவிதமான பக்தி ஸாதனைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றான். இவனுடைய பக்தி வளர வளர, இறைவன் இவனுடைய விஷயத்தில் அருளை வஞ்சனையின்றி பொழிகின்றான். இறைவன் இத்தனை நமக்கு அருள் செய்யும் பக்ஷத்தில், நாம் பக்தியை மேலும் பண்ணவேண்டும் என்று பக்தன் தன்னுடைய பக்தியை அதிகப்படுத்துகிறான். உத்தமமான பக்தனுக்கும் பகவானுக்கும் இவ்விஷயத்தில் போட்டியே நடக்கின்றது. உத்தம பக்தர்கள் எல்லோரும் இறைவனுடைய க்ருபை தாங்க முடியவில்லையே என்றும், தீனனான என்னிடத்தில் இவ்வளவு க்ருபையா என்றும் துதிக்கின்றார்கள்.

பக்தி வளர வளர, பக்தனிடம் பாவ லக்ஷணங்கள் எல்லாம் மிளிர ஆரம்பிக்கின்றன. லோக சிந்தனைகள் எல்லாம் அவனை விட்டு விலகி சித்தம் முழுவதிலும் ஈஸ்வர சிந்தனையே மேலோங்கி இருக்கிறது. ஆகையினால், கண்களில் ஆனந்தக்கண்ணீர் ஏற்படுகிறது. குரல் தழுதழுக்கிறது. மெய் சிலிர்க்கின்றது. அடிக்கடி மூர்ச்சையாகி கீழே விழுகின்றான். இவன் செயல்கள் எல்லாம் லோக விலக்ஷணமாகவே இருக்கின்றன. சாமான்ய ஜனங்கள், மற்றவர்களுக்கு ஏற்படும் தலைவலி, பணக்கஷ்டம் போன்ற ஸம்ஸார துக்கங்களை புரிந்து கொள்கின்றனர். ஏனென்றால், அது அவர்களுக்கும் அனுபவமாகி உள்ளது. ஆனால் ஒரு பக்தன், இறைவனுக்காக கதறி அழும் பொழுது, அவனுடைய அவஸ்தைகளை இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால், ஸம்ஸாரிகளுக்குப் புரியாத விஷயமாக இது உள்ளது. இது மஹாத்மாக்களுக்கே புரியக் கூடியது. இவன் ஈஸ்வரனால் ஆகர்ஷிக்கப்

பட்டிருப்பதனாலேயே இது மாதிரியான பாவ லக்ஷணங்களை அடைந்துள்ளான் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. அவர்களுக்கு புரியாமல் போனதில் கூட வியப்பில்லை. இந்த பக்தனும் தான் ஏதோ தன்னுடைய முயற்சியால் ஈஸ்வரனை அடைவதற்கு தவிப்பதாக நினைக்கிறான். உண்மையில், அவனை ஒரு திவ்ய சக்தி ஆட்கொண்டு நடத்திச் செல்வதை அவன் உணர்வானில்லை. சரி, இந்த பக்தியை விட்டுவிடலாம்; இதெல்லாம் நமக்கு தேவையில்லை என்று நினைத்தாலும் அவர்களால் விடமுடியாது. இதனால், இவர்கள் ஈஸ்வரனால் ஆகர்ஷிக்கப்பட்டிருப்பது புரியவருகின்றது.

பகவானுடைய வாழ்க்கையில், *'திருச்சுழி'* எங்கேயோ இருக்க, திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் பகவானை ஆகர்ஷித்து தன்னிடத்தில் சேர்த்துக் கொண்டது நமக்குத் தெரியும். இதையே தான் ''காந்தம் இரும்புபோல் கவர்ந்தெனை விடாமற்'' என்கிறார் பகவான்.

ஒரு காந்தக்கல்லின் சக்தி வ்யாபித்திருக்கும் எல்லைக்குள் இருக்கும் இரும்பானது காந்தத்தால் ஆகர்ஷிக்கப்படுகின்றது. பார்ப்பதற்கு, இந்த இரும்பு ஏதோ ப்ரயத்தனப்பட்டு காந்தத்தை நோக்கி ஓடுவது போல் தோன்றும். வாஸ்தவத்தில், அந்த இரும்பு, காந்தத்தை நோக்கிச் செல்வதற்கு காரணம் காந்தத்தின் ஆகர்ஷணம் தான். ஆனால், ஆகர்ஷிக்கும் காந்தமோ சலனமில்லாமல் அசலமாய் ஒன்றுமறியாதது போல் உள்ளது. அது போல், அருணாசலேஸ்வரர் தன்னுடைய பக்தர்களை ஆகர்ஷித்து தன்னிடம் வைத்துக் கொள்கிறான். ஆனால், அவனோ சலனமில்லாமல் இருக்கிறான். காந்தக்கல்லின் சக்திக்கு ஒரு எல்லை உண்டு. இவன் அருள் சக்திக்கு எல்லையே கிடையாது. காந்தத்தை விட இரும்பு பெரியதாக இருக்குமானால் காந்தம் இரும்பை நோக்கி ஓடிவருகிறது. அது போல் உத்தம பக்தர்களை இவனே தேடிச் சென்று ஆட்கொள்கின்றான்.

நம் பகவானையும், அப்படி தேடிச் சென்று ஆட்கொண்டதில் வியப்பொன்றுமில்லை. பகவான் நம்மை ஆகர்ஷித்துவிட்டு கைவிடுவானாகில் அவனால் சித்திக்கப்பெற்ற பக்தி அவன் கைவிட்டதால் நம்மை விட்டு விலகுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆகவேதான், ஆகர்ஷித்தது மட்டுமல்லாமல் என்றும் உன்னுடனே வைத்துக் கொள் என்பதனை ''கலந்து என்னோடிருப்பாய் அருணாசலா'' என்கிறார். ஆழ்வார்களும் இதையேதான் *''அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு''* என்கிறார்கள். இறைவனுடன் சரீரத்தினால் ஸமீபத்தில் இருப்பது மட்டும் போதாது. அவனுடன் இரண்டற கலந்து *''நீ வேறு எனாதிருக்க நான் வேறு எனாதிருக்க நேராக வாழ்வதற்குன் அருள் கூறாய்''* என்று

அருணகிரிநாதர் கூறுவது போலவும், *நீயுமே நானுமாவேன்* என்று பக்தர்கள் கூறுவது போலவும், இறைவனுடன் இரண்டற கலக்கவேண்டும் என்பதனை ***"கலந்து என்னோடிருப்பாய்"*** என்ற பதத்தினால் மிக அழகாக ப்ரார்த்திக்கிறார். இந்த திருவண்ணாமலையே அருள் காந்தமயமானது. இதுநாள் வரை பூலோகத்தில் இப்படிப்பட்ட ஒரு க்ஷேத்ரத்தைப்பற்றிக் கேட்டும் படித்தும் இருக்கவே முடியாது. எத்தனையோ அடியார்கள், ஞானிகள் இந்த க்ஷேத்ரத்திற்கு வந்து இங்கேயே ஐக்கியமாகி விட்டார்கள். இங்கிருந்து அவர்களை அருணாசலேஶ்வரர் வேறு எங்கேயும் அனுப்பி வைக்கவேயில்லை. தன்னுடன் இரண்டற கலக்கும்படி செய்துவிட்டான். நம்முடைய பகவான், சேஷாத்ரி ஸ்வாமிகள், குகைநமச்சிவாயம், குருநமச்சிவாயம், வ்ருபாக்ஷி முனிவர் போன்ற அநேக மஹாத்மாக்கள் இங்கு வந்து தன் ஆயுட்காலம் முழுவதும் இங்கேயே தங்கியிருக்கிறார்கள்.

ஜீவன் முக்தர்கள் மலிந்த ஒரு பூமியாகும் திருவண்ணாமலை. ராமன் எவ்வளவோ யுகங்களுக்கு முன்பு அயோத்தியில் அவதாரம் செய்தான். பகவான் க்ருஷ்ணனும் எவ்வளவோ யுகங்களுக்கு முன்பு மதுராவில் அவதாரம் செய்தான். அப்படியிருந்தும் அயோத்தி, மதுரா போன்ற ஸ்தலங்கள் இன்றைக்கும் சாந்நித்யம் குறையாமல் இருப்பதை பக்தர்களால் உணரப்படுகிறது. அதுபோல், அநேக பக்தர்கள், ஞானிகள் திருவண்ணாமலைக்கு வந்து தங்கி அங்கே சித்தியும் அடைந்துள்ளார்கள். மேலே சொல்லப்பட்ட, ஸ்மரித்த மஹாத்மாக்கள் எல்லோரும் ஸமீப காலத்தில் வாழ்ந்தவர்கள் எனில், யுகம் யுகமாக எத்தனை மஹான்கள் வாழ்ந்து இந்த பூமியில் ஸித்தியடைந்திருப்பார்கள்! இப்படி இருக்கையில், இந்த க்ஷேத்ரத்தின் பெருமையை கூறவும், எழுதவும் யாரால் முடியும்?

இங்குள்ள பசு, பக்ஷி, வ்ருக்ஷம் எல்லாவற்றிலும் சிவ ஸாந்நித்யம் இருக்கிறது. நாயன்மார்கள் கூட இந்த க்ஷேத்ரத்திற்கு வந்து அருணாசலேஶ்வரனைப் பாடத் தயங்கினார்கள். காரணம் யாதெனில், ஞானிகளான அவர்களுக்கு பல க்ஷேத்ரங்களுக்குச் சென்று சிவபெருமானை தரிசித்துப் பாடுவதில் ஆசை இருந்ததால், ஒருக்கால் இந்த ஊரில் உள்ள சிவபெருமானை ஸேவிக்க வந்தால், இந்த ஸ்வாமி நம்மை வெளியில் செல்ல விடுவாரா? என்ற பயம் தான். அதனால்தான் சில பக்தர்கள் க்ஷேத்ரத்தின் எல்லையிலேயே நின்று பாடிவிட்டு சென்றுள்ளார்கள்.

(தொடரும்)

- தொகுப்பு: **ஸ்ரீ முரளீதரதாஸன்**

# செய்திகள்

## ஜூலை 25-ந் தேதி முதல்

சென்னை *ப்ரேமிக பவனில்*, மாதுரிஸகி ஸமேத ப்ரேமிக வரதனுக்கு பத்து நாட்களுக்கு *லக்ஷார்ச்சனை* நடைபெற்றது.

---

## ஆகஸ்ட் 1-ந் தேதி

ஆடி வெள்ளியை முன்னிட்டு *மதுரபுரி ஆஸ்ரமத்தில்* கிராம மக்களுக்கு கூழ் வார்க்கப்பட்டு அன்று இரவு 9 மணிக்கு மேல் *''வஸ்த்ராபஹரண லீலை''* தெருக்கூத்து நடைபெற்றது.

---

## ஆகஸ்ட் 11-ந் தேதி முதல் 16-ந் தேதி வரை

சென்னை, *Gopalapuram Hindu Religious Society* கொண்டாடிய ஸ்ரீ க்ருஷ்ண ஜெயந்தி மஹோத்ஸவத்தை ஒட்டி, நம் ஸ்வாமிகள், தினமும் மாலை 7 மணி முதல் 9 மணி வரை *பக்த விஜயம்* என்பது பற்றி உபன்யாஸம் செய்தார்கள். திரளான பக்தர்கள் உபன்யாஸத்தினை ஶ்ரவணம் செய்து ஆனந்தித்தனர்.

---

## ஆகஸ்ட் 26-ந் தேதி முதல்

மதுரபுரி ஆஸ்ரமத்தில் கோகுலாஷ்டமியை ஒட்டி பத்து நாள் *நான்காம் ப்ரஹ்மோத்ஸவம்* கோலாகலமாக ஆரம்பமாகியது.

---

# மதுரமுரளி

Registered as Newspaper in India

R. No. 62828/95
Single Copy Rs. 5/-

Regd. No. TN/MS(S)/714/97
Annual Subs. Rs. 60/-

| வேணு:3 | செப்டம்பர் 1997 | கானம்:2 |
|---|---|---|





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar